## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 51/2015 | Date : 11.10.2023 | RW3 |
|---|---|---|
| Name: தங்கவேல் | த/பெ. **குழந்தைசாமி** | |
| Evidence Recorded Time: 01.31 P.M. to 01.50 P.M. | | |

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

விபத்து சமயத்தில் TN 36 K 0938 மகேந்திர வாகனத்திற்கு நான் தான் உரிமையாளர் என்றால் சரிதான். விபத்துசமயத்தில் எனது வாகனத்திற்கு முறையாக காப்பீடு செய்துள்ளேனா என்றால் நேசனல் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ளேன். விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது, அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிம வில்லை இருந்ததா என்றால் இருந்தது. மேற்படி ஓட்டுநர் உரிமத்தை எப்போது எடுத்தேன் என்றால் 2011-ல் எடுத்தேன். என்னுடைய ஓட்டுநர் உரிமம் எப்போது புதுப்பிக்கப்படவேண்டும் என்றால் 2031ல் புதுப்பிக்க வேண்டும். விபத்து 2015ல் நடைபெற்றது என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் 27.03.2015-ல் ம.சா.ஆ.8-ல் நான்தான் வாகனத்தின் உரிமையாளர் என்றும், ஓட்டுநர் என்றும் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் நான்தான் உரிமையாளர், ஆனால் நான் வாகனத்தை ஓட்டவில்லை. மற்றொரு மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை தாக்கல் செய்து வாகனத்தை நான் ஓட்டவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குற்றவியல் நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக நான் வேறு நபர்தான் வாகனத்தை ஓட்டினார் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் ஏற்கனவே மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்திருக்கும் போது, வேறு ஒரு மோட்டார் வாகன ஆய்வாளரிடம் அறிக்கை பெற்று பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர் தாக்கல் செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைதான் சரியான அறிக்கை என்றாலும், நான் தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் முறையாக காப்பீடு செலுத்தியுள்ளதாலும், எனக்கு முறையாக ஓட்டுநர் உரிமம் உள்ளதாலும் 2-ம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனம்தான் இழப்பீடு

வழங்கவேண்டும் என்றால் சரிதான்.

**<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -</u>**

விபத்து சம்மந்தமாக நான் வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் காண்பித்தேன் என்றால் சரிதான். அந்த அறிக்கையில் சுரேஷா என்பவரைதான் ஓட்டுநராக காட்டப்பட்டுள்ளது. ம.சா.ஆ.8 ஆவணத்தில் 5F காளத்தில் என் முகவரிதான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ம.சா.ஆ.8 ல் 6 வது காளத்தில் என்னுடைய விலாசம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் நான் வாகனத்தை ஓட்டவில்லை. எனது வண்டியை சுரேஷா என்பவர் ஓட்டி சென்றிருந்தால் என்னுடைய விலாசம் அவர் ஏன் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. இதுநாள் வரை அதை நான் அவரிடம் கேட்கவில்லை. ஒரே விபத்திற்கு இரண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த விபத்து சந்தேகத்திற்குரியது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இன்சூரன்ஸ நிறுவன வழக்கறிஞரிடமிருந்து அறிவிப்பு வந்ததா என்றால் வந்தது. அதற்கு நான் பதில் கொடுத்திருந்தேன். நான் இரண்டு ஒப்புதல் அட்டைகளை எனது தரப்பில் எ.ம.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்துள்ளேன், அதில் ஒன்று நேசனல் இன்சூரன்ஸ் நிறுவனம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, மேற்படி நிறுவனத்திற்கு என்ன அறிவிப்புகொடுத்தேன் என்று நகல் தாக்கல் செய்யவில்லை என்றாலும், ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் நிறுவனத்திற்கு அனுப்பிய அஞ்சல் ஒப்புதல் அட்டைய இந்த வழக்கிற்கு சம்மந்தம் இல்லாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், இந்த வழக்கில் முன்னுப்பின் முரணமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை - இல்லை.</u>**

ஓம்/-RW3,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஓம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.